**தலைப்பு 207 – தொல்பொருளியல் திணைக்களம்**
-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 207 – தொல்பொருளியல் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் தொல்பொருளியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 09 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் தொல்பொருளியல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க

கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்களின் பந்திக்கான தொடர்பு | நடைமுறைப்படுத்தப்படாத கணக்காய்வு அவதானிப்பு பரிந்துரை | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| 3.8 (ஐ) | காணிகள் கட்டிடங்களின் உரித்து திணைக்களத்திற்கு கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 1.6.1 (ஆ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள

### 1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ''பீ'' கணக்கின் தனிப்பட்ட மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் மீதி கூட்டுத்தொகை ரூபா 114,722,046 ஆக காணப்பட்டதுடன், கடன் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூபா 115,104,660 ஆக காணப்பட்டது. | 2014 முதல் காணப்படும் முன்பண "பி" கணக்கில், கட்டுப்பாட்டு கணக்குக்கும் தனிநபர் கணக்கிற்கும் இடையே உள்ள மீதிகளின் வித்தியாசம் 2023 திசெம்பர் மாதமாகும் போது ரூபா 382,614 வரை | தனிப்பட்ட மீதிகள் பதிவேடு மற்றும் கடன் கட்டுப்பாட்டு கணக்குகளுக்கிடையே காணப்படுகின்ற இந்த வேறுபாடு அடையாளப்படுத்தப்பட்டு தீர்வு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| அதன் பிரகாரம் அம்மீதிகளுக்கிடையில் ரூபா 382,614 ஆன வேறுபாடொண்டு அவதானிக்கப்பட்டது. | குறைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீதிகளுக்கிடையே வேறுபாடு காணப்படுவதுடன் படிப்படியாக இந்த வேறுபாடு தேடப்படுகிறது. அதன்படி, மேலும், தேடப்பட வேண்டிய மீதி ரூபா 382,614 என தெரிவிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) ஆதனம், பொரி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதி கூற்றினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 911,500,000 ஆன காணிகள் மற்றும் ரூபா 138,320,748 ஆன கட்டிடங்கள் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்று நிருபத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் மீள் மதிப்பிடப்பட்டு சரியான பெறுமதியை கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், திணைக்களத்தின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமையை சுவீகரிக்கும் நடவடிக்கையும் நிறைவடைந்திருக்கவில்லை. | நிதியல்லாத சொத்துக்களில் உள்ளடங்கிய காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக, சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2018 இன் பிரகாரம், மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யவில்லை என அடயாலம் காணப்பட்டதுடன், அந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2018 டிசம்பர் 31, திகதிய 04/2018 இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(இ) ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | **மின்சார உபகரணம் தொடர்பான ஆவணம்**<br>நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான ஆவணம் ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | மின்சார உபகரணங்கள் தொடர்பான ஆவணம் ஒன்று இதுவரை பேணப்பட்டிருக்கவில்லை எனபதுடன், இனிவரும் காலங்களில் பதிவேடு பராமரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அரச கட்டிடங்களில் உள்ள அனைத்து மின்சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் தொடர்பான பண்ட புத்தகம் பராமரிக்கப்பட வேண்டும். |
| (ii) | **தொல்பொருட்கள் தொடர்பான மையப்படுத்தப்பட்ட பொருட் பதிவேடு**<br>நிதிப் பிரமாணம் 751 இன் பிரகாரம் தொல்பொருட்கள் | இந்தத் திணைக்களத்திற்குச் உரித்தான 28 அருங்காட்சியகங்களுக்கும், 28 தொல்பொருட்களின் இருப்புப் பதிவேடுகள் | நிதிப் பிரமானம் 751 இன் பிரகாரம் தொல்பொருட்கள் தொடர்பான மையப்படுத்தப்பட்ட பொருட் பதிவேடு தயாரித்தல் |

| | | |
|---|---|---|
| தொடர்பான மையப்படுத்தப்பட்ட பொருட் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. | தனித்தனியாகப் பராமரிக்கப்படுகின்றன. அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலின் அடிப்படையில், பழங்கால பொருட்களின் மையப்படுத்தப்பட்ட சரக்கு பதிவேடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. | முடிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வெலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு தேவையான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக வருடாந்த மதிப்பிடலின் மூலம் போதுமான அளவு ஒதுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் 2023 ஆம் வருடத்தினுள் தொல்பொருளியல் நிலையங்களை பராமரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தலுக்காக மத்திய கலாச்சார நிதியத்தினால் கிடைக்கப்பெற்ற பொது வைப்புக்கள் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்த ரூபா 6,210,550 தொகையிலிருந்து ரூபா 3,934,350 அவ்வாரெனில் நூற்றுக்கு 63 மீளாய்வாண்டினுள் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. | திணைக்களத்தில் கணனிகள் மற்றும் பாகங்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியதுடன், பாதுகாப்பு, பராமரிப்பு, ஆய்வு, அகழ்வாராய்ச்சி, கல்வியியல் போன்றவற்றிற்கு தேவையான மதிப்பீடு தயாரித்தல், அறிக்கைகள் தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் கணனிகள் பற்றாக்குறையால் தாமதமாகின. அதற்கு தீர்வாக, தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தரின் சிறப்பு அங்கீகாரத்தின்ட மூலம் கொள்வனவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | தொல்லியல் தளங்களின் பராமரிப்பு மற்றும் நிர்வாகத்திற்காக பெறப்படும் நிதி அந்தந்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் | கருத்துகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாட்டின் பிரகாரம் செயல்பட வேண்டும். |

பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | அவதானிப்பு பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 1998ஆம் வருட 24 ஆம் இலக்க தொல்பொருளியல் (திருத்தம்) சட்டத்தின் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட 1940 ஆம் வருட 09 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளை சட்டத்தின் 43அ (2) ஆம் பிரிவு. | - | முன்மொழியப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் சேத மதிப்பீட்டு கணக்கெடுப்புகளை திட்டத்தின் அனுசரணையாளர்களின் செலவில் தொல்லியல் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ள ஏற்பாடு செய்திருக்க வேண்டிய போதிலும், கோரிக்கைகள் அல்லது தேவையான அங்கீகாரம் பெறப்படாமல் மேற்கொள்ளப்பட்ட 08 அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | தொல்லியல் சேத மதிப்பீடு கணக்கெடுப்பு செயல்முறை தொடர்பான 1998 இன் 24 ஆம் இலக்க தொல்பொருளியல் (திருத்தம்) சட்டத்தின் மற்றும் 2000 அக்டோபர் 04, திகதியிட்ட 1152 இலக்க வர்த்தமானி அறிவிப்பு மூலம் பகிரங்கப் படுத்தப்பட்டுள்ளது. அதன் படி குறித்த நிருவனத்தினால் அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சேத மதிப்பீடு அறிக்கையை பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். மேலும், இது தொடர்பாக அனைத்து உள்ளூராட்சி அமைப்புகள்/அரச அமைப்புகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளகானக குறிப்பிடப்பட்டிருந்தது. | தொல்லியல் சேத மதிப்பீடு கணக்கெடுப்பு செயல்முறை தொடர்பான 1998 இன் 24 ஆம் இலக்க தொல்பொருளியல் (திருத்தம்) சட்டம் மற்றும் 2000 அக்டோபர் 04, திகதிய 1152/14 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்ற 02 வைப்பு கணக்குகளில் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 22,742,458 ஆன வைப்புத் தொகை நிதி பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வெளி தரப்பினரின் வைப்புக்களை அரச வருமானத்தில் வரவு வைப்பதற்காக நன்கொடைப் பணத்தை வழங்கிய தரப்பினரின் சம்மதம் அல்லது மறுப்பு கோருவது இந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்டு வருவது என்பதை தெரிவிக்கப்பட்டது. | நிதி பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் தீர்வு செய்யப்பட வேண்டும். |

### 2.5 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்

வங்கி கணக்குகளை செயற்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொல்பொருளியல் ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற நன்கொடைகளை செலவு வைப்பதற்காக வேறு கணக்கு ஒன்றை நிறுவுமாறு 2021 நவம்பர் 16ஆம் திகதி கிடைக்கப்பெற்ற அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 2022 ஆம் வருடத்தில் மக்கள் வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையில் நடைமுறை கணக்கொன்று திறக்கப்பட்டிருந்த போதிலும் 2024 மார்ச் 28ஆம் கணக்காய்வு தினத்திலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன் கொடையாளர்களிடமிருந்து நன்கொடைகள் கிடைக்கப்பெறாததன் காரணமாக நடைமுறை கணக்கு விளை வற்று காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டு முதல் கணக்குகள் செயற்படுத்தப்படும் என்பதை தெரிவிக்கப்பட்டது. | அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் மற்றும் திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் மற்றும் இணக்கப்பாட்டுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வங்கிக் கூற்று மற்றும் வங்கி இணக்க கூற்றின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 67,168,182 ஆன வங்கி மீதி நிதிக் கூற்றுகளின் இணைப்பு (viii) இல் ரூபா 1,579,237,084 ஆக ரூபா 1,512,068,902 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2023.12.31 திகதியில் உள்ளவாரான வங்கி மீதி ரூபா 67,168,182 என்பதாக தெறிவிக்கின்றேன். தவறுதலாக, வங்கி கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள செலவு மற்றும் வரவு வரம்பின் மதிப்பான ரூபா 1,579,237,084 தொகை நிதிக் கூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | வங்கி கணக்குகள் தொடற்பாக 2023 டிசம்பர் 31 திகதியில், உள்ளவாரான் நிலைமை அறிக்கையில் வங்கி கூற்றின்படி மீதிகளை சரியாகச் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொல்பொருள் தளங்களை பாதுகாத்துக் கொள்ள, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளுதல் தொல்பொருள் தளங்களுக்கு மற்றும் நினைவு சின்னங்களுக்கு, சேதம் ஏற்படுத்துகின்ற நபர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நாட்டில் காணப்படுகின்ற அனைத்து தொல்பொருள் தளங்கள் தொடர்பாக ஏனைய பிரச்சனைகளை அவதானித்தல், அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை இனங் காணுதல், காலத்துக்கு காலம் கிடைக்கப் பெறுகின்ற தொல்பொருள்களை ஆவண படுத்துதல் மற்றும் களஞ்சியப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை முறைமைப்படுத்தல் உள்ளடங்களாக தொல்பொருள் திணைக்களத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக அளவிடுவதற்கான அனைத்து தொல்பொருள் வலய அலுவலகங்கள் மற்றும் பிரதேச அலுவலகங்கள் பிரதான அலுவலகத்துடன் ஒன்றிணைந்த முறையான மேற்பார்வை திட்டமொன்று திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தினைக்களத்தின் அனைத்து பிரிவுகளையும் மேற்பார்வை செய்யும் திட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன் விரைவில் செயல்படுத்தப்படும். எனவே, கணக்காய்வு மூலம் அவதானிக்கப்பட்ட தகவல்கள் மேற்பார்வை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. | முறையான மேற்பார்வை திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தொல்பொருள் பனிப்பாளர் நாயகத்தினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற அகழ்வு அனுமதி பத்திரத்தின் மூலம் வெளித்தரப்பினரால் கண்டெடுக்கப்படுகின்ற தொல்பொருள்களை திணைக்களத்துக்கு பெற்றுக் கொள்வதற்கான முறையான நடைமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படாமை, உரிய அகழ்வு அறிக்கை பெற்றுக் கொடுப்பதற்கு 04 வருடங்கள் போன்ற நீண்ட காலம் ஒன்று எடுப்பதனால் திணைக்களத்தின் பணிகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது. | செயற் திட்டம் நிறைவடைந்த பின்னர், 03 மாதங்களுக்குள் தொழில்நுட்ப அறிக்கை பெறப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், அதன் பிரகாரம் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் பற்றிய அறிக்கை தயாரிக்கப்படும். அகழ்வாராய்ச்சியின் போது கிடைக்கப் பெறுகின்ற தொல்பொருட்களை மேலும் பகுப்பாய்வு செய்து முழுமையான அறிக்கையொன்றை பெற்றுக் கொடுப்பதற்காக மாத்திரம் அதிகபட்சமாக 4 ஆண்டுகள் அவகாசம் அளிக்கப்படுகிறது. முறையான அறிக்கையின் பின்னர் தொல்பொருட்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | அகழ்வாராய்ச்சி அறிக்கைகளை சரியான காலங்களில் பெறுவதற்கு பின்தொடர்தல் இருக்க வேண்டுமெ ன்றும், அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்கள், திணைக்களத்தில் பொறுப்பேற்க முறையான வேலைத்திட்ட மொன்று அமைக்கப்பட வேண்டும். |
| (இ) | கனிம மற்றும் பாறை அகழ்விற்காக தொல்பொருளியல் பரிந்துரைகள் தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்தின் 2019 ஜுன் 01ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் 2018 ஜுன் 01ஆம் திகதியிலிருந்து வருடாந்தம் பெற்றுக் கொடுக்கப்பட்ட போதிலும், 2020 மார்ச் 05ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், நீண்ட கால பரிந்துரைகளை பெற்றுக் கொடுத்தல் காரணமாக தொல்பொருளியல் தடயங்கள தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படாததன் காரணமாக் தொல்பொருள்களுக்கு சேதம் ஏற்படக்கூடிய ஒன்றாகவும், பதவி அணியினர் மற்றும் போக்குவரத்து வசதிகள் குறைபாட்டினால் மீண்டும் பரிசீலனைக்குட்படுத்தல், இடம் பெறாமைக்கும் அவதானிக்கப்படாமல் இருந்தது. | கனிம மற்றும் பாறை அகழ்விற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் நீண்டகாலமாக அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் இடம்பெற்றிருந்தது. வருடாந்தம் பரிந்துரை களை வழங்குவதற்கு வருமானத்தை விட அதிக செலவு செய்ய வேண்டியிருப்பதால் வருடாந்தம் உரிமங்களை வழங்குவதற்கான நடைமுறையொன்றை தயாரித்தல் தொடர்பாக அவதானத்தை செலுத்தவில்லையென்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. | கனிமங்கள் மற்றும் பாறைகளை பிரித்தெடுப்பதற்கான தொல்பொருள் பரிந்துரைகளை வழங்குவதில் பின்தொடர்தல் அவசியம் மற்றும் தொடர்புடைய உள்ளக சுற்றறிக்கைகள் காலத்திற்கு காலம் திருத்தப்பட்டு தேவையான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | குருநாகல் மாவட்டத்தில் 03 கருங்கள் செயற்திட்டங்களுக்கு அனுமதிப்பத்திரம் பெற்று கொடுக்கப்படல் தொடர்பாக 2013 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கள பரிசோதனையின் போது தொல்பொருள் தடயங்கள் தொடர்பான | முதல் கள பரிசோதனையின் போது, பாறை மேற்பரப்பு அல்லது சில பகுதி மண்ணால் மூடப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | உள்ளக நடைமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க, பின்தொடர்வதற்கான கள ஆய்வுகளில் |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தல்கள் இல்லாமையின் காரணமாக தொல்பொருள் சேத மதிப்பீட்டு பரிந்துரைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டு கருங்கள் அகழ்வு செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீண்டும் 2019 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கல பரிசோதனையின் போது தொல்பொருள் தடயங்கள வெளிப்படுத்தலின் காரணமாக அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படாமல் தொல்பொருள் பரிந்துரை வழங்கப்பட்டதனால் 07 வருடங்கள் அளவான காலத்தினுள் கல்போர் பயன்படுத்தி கருங்கள் அகல்வதனால் தொல்பொருள் சின்னங்களுக்கு சேதம் ஏற்பட்டிருந்தது. | தொல்பொருள் பரிந்துரைகள் வழங்கப்படுவது, நிலத்தின் மேற்பரப்பின் பார்வையின் அடிப்படையில் மட்டுமே ஆனதால், ஏதோ ஒருவகையில் பரிந்துரைகள் வழங்கப்பட்ட இடத்தில் அகழ்வுகளை மேற்கொள்ளும் போது அல்லது மீண்டும் இடத்தை ஆய்வு செய்யும் போது தடயங்கள் கண்டறியப்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது. | ஈடுபடுவதற்கு அதிகாரிகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு, உள்ளக சுற்றறிக்கைகளை அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | வட மாகாணத்தில் பெரும்பாலான தொல்பொருளியல் தளங்களில் ஆரம்ப கட்ட அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் மாத்திரம் இடம்பெற்று இருப்பதுடன் விபரமான ஆராய்ச்சியின் ஊடாக உரிய தொடர் நடவடிக்கைகள் தொல்பொருள் பணிகள் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் கீழ் உள்ள பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் போது, வடமாகாணத்தில் வசிக்கும் போதியளவிலான நபர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடியாத காரணத்தினால் அப்பகுதிகளில் கடமைகளுக்காக குறைந்தபட்ச எண்ணிக்கையிலான பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்கு, மற்ற பகுதிகளில் உள்ள ஊழியர்களுக்கு ஊக்குவிப்பதற்காக, கஷ்ட உதவித்தொகை வழங்க, முறையான ஏற்பாடு தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டது. | 09 மாகாணங்களுடன் தொடர்புடைய 15 பிராந்திய அலுவலகங்களின் ஊடாக, தொல்பொருள் பணிகளுக்கான சரியான திட்டங்களைத் தயாரித்து அவற்றை நிறைவேற்ற உயர் நிர்வாகம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2010 ஆம் வருடத்தில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலை திட்டத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியின் கீழ் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் தொல்பொருளியல் திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப அகழ்வாராய்ச்சியுடன் 2018 ஆம் வருடத்தில் தொல்பொருள் பிரதேச | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தொல்பொருட்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் ஆண்டு தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, தொல்பொருள் இடங்களின் |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகங்கள் நிறுவப்பட்டு 2023 ஜூலை மாதமாகும் போது, வட மாகாணத்தில் ஒட்டுமொத்தமாக 479 தளங்கள் அடையாளப்படுத்தப்பட்டு தொல்பொருள் தளங்கள் 252 இன் உரிமை சுவிகரிக்கப்பட்டு எல்லைக்கம்பங்கள் நிறுவப்பட்டு வர்த்தமானியின் மூலம் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | உரிமையை கையகப்படுத்தி, எல்லைக்கம்பங்கள் நிறுவப்பட்டு வர்தமானியின் மூலம் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | நாகதாம்பரான், வவுனியா குளம், சிவபுரம், ஸ்ரீமலே கோவில் ஆகிய அடையாளமிடப்பட்ட தொல்பொருள் எச்சங்கள் காணப்படுகின்ற தலங்களில் தற்போதும் தூப கட்டிடங்கள் முழுமையாக தரமட்டமாக்கப்பட்டு அந்த காணியினுள் மற்றும் நெடுங்கேணி சிவ நகர், குலாமுறிப்பு, கொட்டியாமலை ஆகிய தொல்பொருளியல் தளங்களில் உள்ள தூப கட்டமைப்புக்களில் ஏனைய சமய தளங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தொல்பொருட்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, தொல்பொருட்கள் பாதுகாக்கப்பட வேண்டியதுடன், தேவையேற்படும் பட்சத்தில் பாதுகாப்பு அமைச்சின் உதவியைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | வட மாகாணத்தில் அமைந்துள்ள வெடிக்கினாரி மலை தொல்பொருள் தளம், நெலுக்குளம், கிம்புலாகல நந்திமித்திர கிராமம் தொல்பொருள் பிரதேசத்தில் காணப்படுகின்ற நினைவுச் சின்னங்கள், நெடுங்கேணி சிவ நகர் தொல்பொருள் தளம், சமலன் குளம் பிரதேச செயலாளர் அதிகாரத்துக்குட்பட்ட கமலன்குளம் தொல்பொருள் தளம், மாதொட்டை துறைமுக நகர் மற்றும் 2008 ஜூன் 06 ஆம் திகதிய 1553 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பாதுகாப்பு நினைவுச் சின்னமொன்றாக வெளிப்படுத்தப்பட்ட தோணிகள தொல்பொருள் தளமும், இதுவரையும் உரிய எல்லைகள் அடையாளப்படுத்தி தொல்பொருள் பாதுகாப்பகமொன்றாக அல்லது நினைவு சின்னமாக வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை. | ஒப்புக்கொள்கிறேன். | எல்லைகள் அடையாளம் காணப்பட்டு, தொல்லியல் காப்பகம் அல்லது நினைவுச் சின்னமாக வர்த்தமானியின் வெளியிடப்பட்டு, மேலும் தொல்லியல் பணிகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | குருந்துமலை (குருந்தி) தொல்பொருளியல் தளத்தில் எச்சங்கள் பெரும்பான்மையாக வியாபித்து காணப்படுகின்ற 229 ஏக்கர் நிலப்பகுதியை அளந்து மானக்க திட்டமொன்றை தயாரித்துத் தருமாறு 2020 நவம்பர் மாதத்திலிருந்து உரிய அரச நிறுவனங்களினால் வேண்டப்பட்டிருந்த போதிலும் இந்த பணிகளை கணக்காய்வு தினம் வரையும் நிறைவேற்றி இருக்கவில்லை. | ஒப்புக்கொள்கிறேன். | குரித்த அரச நிறுவனங்களை தொடர்பு கொண்டு அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு தொல்லியல் காப்பகமாக அறிவிக்க வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 பாதீட்டின் ஊடாக திணைக்களத்தின் அத்தியாவசியமான முதன்மை செயற் திட்டங்கள் 170 காக ரூபா 161 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 10 செயற்திட்டங்களின் பௌதிக முன்னேற்றம் குறிப்பிடப்படாதிருந்ததுடன் 20 செயற்திட்டங்களின் பௌதிக முன்னேற்றங்கள் நூற்றுக்கு 50 ஐ விட குறைவாக காணப்பட்டிருந்தது. | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | திட்டமிடப்பட்ட முறையில் ஒதுக்கப்பட்ட பணத்தை செலவிடுவதில் கவனம் செலுத்த வேண்டும். |

## 3.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கண்டி இரஜவாசல மற்றும் அருங்காட்சியகத்தை புணர் நிர்மாணம் செய்வதற்காக ஐக்கிய அமெரிக்க இராஜ்ஜியத்தினால் கிட்டிய வகையில் 265,000 அமெரிக்க டொலரான ரூபா 52,997,350 பெற்றுக் கொடுப்பதற்கு ஒப்பந்தமாகியிருந்த போதிலும் செயற்திட்டத்தின் பௌதீக செயற் திறன் நிலைமையை கருத்தில் கொண்டு அமெரிக்க ஐக்கிய இராஜ்யத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த கிட்டிய வகையில் 156,750 ஆன அமெரிக்கா டொலர் ரூபாயில் ரூபா 45,940,561 மாத்திரமானதுடன் இரண்டு வருடங்களான இந்த செயற் திட்டத்தின் ஒப்பந்த காலம் 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இந்த செயற்திட்டத்தின் | இந்த செயற்திட்டம் 2024 ஆகஸ்ட் 31 திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு பணிக்காக வழங்கப்பட்ட ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் ஏற்பட்டதால் சிட்டைகளை செலுத்த முடியவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்டம் காலாவதியாகாததால் திருப்பி அனுப்பப்பட்ட பணத்தை மீண்டும் பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டது. | வெளிநாட்டு உதவியாகப் பெறப்படும் பணத்தை உரிய நோக்கங்களை அடைவதற்கு உச்ச மட்டத்தில் பயன்படுத்த வேண்டும். |

பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 57ஆகவும், நிதி முன்னேற்றம் நூற்றுக்கு 21 ஆகவும் மாத்திரம் காணப்பட்டதுடன் 2023 ஆம் வருடத்திற்கு திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்த கட்டு நிதி ரூபா 41,879,303 ஆல் நூற்றுக்கு 63 அவ்வாறெனில் ரூபா 26,788,750 தொகையொன்று மீண்டும் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. திணைக்களத்தின் பலவீனமான முகாமைத்துவம் இதற்கு காரணமாக இருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 இல் செயலிழந்து 2016 ஆம் வருடத்தில் ரூபா 128,520 செலவிடப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த GIS பிரிவிக்கு வரைபடம் அச்சுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த HP வகையின் Desing Jet 800 Ps மாதிரியின் ப்லொட்டர் அச்சியந்திரம் 2023 ஜூலை மாதமாகும் போதும் மேலும் செயலிழந்து விளைவற்ற நிலைமையில் காணப்பட்டதுடன் இந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட காலம், செலவுகள் தொடர்பாக, நிச்சயமான தகவல்களை தேடிக் கொள்வது சிரமமானது என அறிக்கை படுத்தப்பட்டிருந்தது. | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | இயந்திரம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படடடு பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளதா, அவ்வாறு இல்லையென்றால், அகட்டப்பட வேண்டுமா என, தொடர்பில் தொழில்நுட்ப அறிக்கையைப் பெற்று, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | GIS பிரிவில் காணப்படுகின்ற தொல்பொருள் தளங்களின் அமைவிடங்களை பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற 05 GPS இயந்திரங்களில் 04 உம் செயற்பாட்டு நிலையில் இல்லாததன் காரணமாக உரிய தொல்பொருள் தளங்களுக்கான சரியான GPS தொகுதியிலக்கம் பெற்றுக் கொள்வதில் பிரச்சனைக்குரிய நிலைமையொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | வருடாந்த மதிப்பீட்டுக்களினுள் சேர்க்கப்பட்டு அத்தியாவசியமான பெறுகைகள மேற்கொள்ளப்பட வேண்டியதாக. |
| (இ) | திணைகளத்திற்கு சொந்தமான இரண்டு வாகனங்கள் ஓட்டத்துக்கு தகுதியற்றதாக 2022 நவம்பர் 21 மற்றும் 2023 ஆகஸ்ட் 28 திகதிகளில் இயந்திர பொறியியலாளரால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்த நிலையில் 2024 மே 31 கணக்காய்வு தினதி வரையும் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளப்படாமல் தறிப்படத்தில் | இரண்டு வாகனங்களின் திருத்தங்களுக்கான விலைகள் பெறப்பட்டுள்ளதோடு இயந்திர பொறியியலாளரின் பரிந்துரைகளின் அடிப்படையில் | விரைவில் திருத்த நடவடிக்கைகளை நிறைவு செய்து ஓட்டத்துக்கு தகுதியானதான நிலைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருந்தது. உரிய வானங்கள் இரண்டும் ஓட்டத்திற்கு தகுதியற்றது என சாரதிகளினால் 2021 நவம்பர் 17 ஆம் திகதி மற்றும் 2022 செப்டம்பர் 27ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் 2 வாகனத்திற்குமான இயந்திர பொறியியலாளர் களினால் பரிந்துரைகள் வழங்கப்படுவதற்கும் முறையே 01 வருடம் மற்றும் 11 மாத காலம் தாமதித்தல் மற்றும் பாதுகாப்பற்ற நிலையில் நறுத்து வைக்கப்பட்டதன் காரணமாக குறித்த கிரயத்தை விஞ்சி செலவிடுவதற்கு நேர்ந்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. | திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும், வாகனங்களை மழைநீரில் இருந்து பாதுகாக்க கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பாதுகாப்பொன்று பராமரிப்புப் பிரிவினால் நிர்மானிப்பதற்கு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஈ) | 2018 ஒக்டோபர் 09 திகதி மத்திய பிரதேச தொல்பொருள் அலுவலகத்துக்கு உரித்தான டப்ள் கெப் வாகனத்துக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவரான அந்த வாகனத்தின் சாரதிக்கு ரூபா 46,500 தண்டப்பணம் ஒன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், வாகனத்துக்கு ஏற்பட்ட நட்டமான ரூபா 5,882,769 வை நிதி பிரமாணம் 104இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு அறவிட்டுக் கொள்வதற்கும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கெப் வாகனத்தை திருத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மத்திய பிரதேச தொல்பொருள் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட PG 4006 டபள் கெப் வாகனத்தின் சாரதி இந்த விபத்தில் குற்றம் சாட்டப்பட்டு தற்போது பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்தச் நி.பி 104(4) விசாரணைக்காக ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு அதன் பரிந்துரைகளுக்குப் பின்னர், தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த வாகனத்தின் திருத்தங்களுக்காக விலை மனு கோரப்பட்டுள்ளதுடன், அதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. | நட்டங்கள் தொடர்பில் நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 இழப்பு மற்றும் சேதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 செப்டெம்பர் 18 ஆம் திகதியிலிருந்து 2023 ஜுலை 19ஆம் திகதி வரை திடீர் விபத்துக்குள்ளான திணைக்களத்தின் 10 வாகனங்கள் தொடர்பாக நிதி பிரமாணம் 104 (1) இன் பிரகாரம் முறையான பரிசீலனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு நட்டங்கள் மதிப்பிடப்பட்டு பொறுப்பு கூற வேண்டியவர்கள் இனம் காணப்படுவதற்கும் | 2018 முதல் 2022 வரையிலான வாகன விபத்துக்கள் குறித்து நி.பி. 104(4) உரியவாரு நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டில் நிகழ்ந்த வாகன விபத்துகளுக்கு நி.பி. 104(4) விசாரணைக்காக | நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு மற்றும் சேதம் தொடர்பான ஆவணத்தில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 2023 ஏப்ரல் 12ஆம் திகதியிலிருந்து நவம்பர் 18ஆம் திகதி வரையான காலத்தினுள் விபத்துக்குள்ளான 06 வாகனங்களின் ரூபா 274,000 ஆன மொத்த நட்டத்தையும் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசீலனை நடவடிக்கைகள் நிறைவு செய்து பொறுப்பு கூற வேண்டியவர்களிடமிருந்து மீள பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். ஒரு வாகன விபத்து தொடர்பாக, நி.பி. தற்போது பரிசீலனை அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அதன் பிரகாரம் கிடைக்கப் பெற்றுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்தகட்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதர விபத்துக்களுக்காக நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரிகள் குழுவிடம் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வவுனியாவில் ரங்கெத்கம கள என்ற பெயருடைய இடத்தில் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுடான் சமலன்குளம் வனப் பிரதேசத்தில் சுற்றி காணப்படுகின்ற சமலான் குளம் என்ற பெயருடைய இடத்தில் கனிமம் மற்றும் பாறை அகழ்வுக்காக தொல்பொருள்கள் பரிந்துரைகள் பெற்றுக் கொடுக்கும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம், தொல்பொருள் திணைக்களத்தின் விசேட அனுமதியொன்றை பெற்றுக் கொள்ளாமல் 50 அடி அளவிலான விசாலமான ஆழமுள்ள கல் உடைத்து நீக்கப்படடு கைவிடப்பட்ட நிலையில் அந்த இடத்தில் நீரினால் நிரம்பி காணப்படுவதுடன் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரங்கெத்கம முன்மொழிவு தளம் மற்றும் அதனை சுற்றியுள்ள 50 மீட்டர் பிரதேசத்தினுள் நிலத்தின் மேற்பரப்பை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பின் அடிப்படையில், வரலாற்று ரீதியான அல்லது தொல் பொருள்கள் தடயங்கள் கிடைக்கப் பெறாதது என தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது முன்மொழிவுகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அருகில் உள்ள கற்பாறைகளில் தொல் தடயங்கள் காணப்படுவதாக கணக்காய்வு கள பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | கனிமப் அகழ்வின் போது, ஏதேனும் தளமொன்றுக்கு அனுமதி பத்திரம் பெற்றுக் கொடுத்தல், தொல்பொருள் திணைக்களத்தினால் குறித்த தளம் பரிசீலிக்கப்பட்டு மேற்பரப்பில் தொல்பொருள் காரணிகள் எதுவும் இல்லை என்றால் பரிந்துரைகளை வழங்குகிறது.<br><br>இதற்கான அனுமதிகள் வழங்கப்படுவது புவியியல் மற்றும் சுரங்கத் பணியகத்தின் ஊடாக என்பதுடன், மேற்படி அனுமதியின் நிபந்தனைகளை மீறும் பட்சத்தில், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான ஆய்வுடனான தொல்லியல் பரிந்துரைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தோனிகல தொல் பொருளியல் இடத்தை பொதுமக்கள் கண்காட்சிக்காக திறந்து வைக்கும் நோக்கத்தில் அத்தியாவசியமான நிர்மான பணிகளுக்காக 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருந்த அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அப்போது அந்த நிறுவனம் எதிர்கொண்ட நிதி நெருக்கடி காரணமாக இப்பணிகளை மேற்கொள்ள முடியாமல் போனதுடன், எதிர்காலத்தில் தேவையான ஏற்பாடுகள் கிடைத்தவுடன் பணிகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. | தொல்லியல் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை பாதுகாக்க திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (இ) | ஷிலா மஞ்சுஷா வகைக்குட்பட்ட மஹாஷிலா அடக்கஸ்தலமான 26 ஏக்கர் அளவு பரப்பளவு உள்ள பிரதேசத்தில் தொல்பொருள் எச்சங்கள் வியாபித்து காணப்படுகின்ற மாமடுவ மூல வரலாற்று ரீதியான அடக்கஸ்தலம் தொல்பொருள்கள் இடமான வன பாதுகாப்பு திணைக்களத்தினால் தொல்பொருள் பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளாமல் காட்டு வேளாண்மை நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாக தொல்பொருள் சாதனங்களுக்கு சேதங்கள் ஏற்பட்டிருந்ததுடன் கூடுதலான சேதங்கள் ஏற்பட்டதன் காரணமாக 2022 ஜூலை 28ஆம் திகதி 2290/33 ஆம் இலக்க வர்தமானி அறிவித்தலின் மூலம் தொல்பொருள் காப்பகமொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | ஒப்புக்கொள்கிறேன். | காணப்படும் நிலத்தின் வடிவத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தும் போது தொல்லியல் பரிந்துரைகள் பெறப்பட வேண்டும் என்பதை அனைத்து அரச நிறுவனங்களுக்கும் மற்றும் தனியார் நிறுவன அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | போர்த்துக்கேயர்களினால் நிர்மாணிக்கப்பட்டு பின்னர் ஒல்லாந்தர்களினால் புனர் நிர்மாணம் செய்யபட்டுள்ளதாக மூல தடயங்கள் காணப்படுகின்ற மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலாளர் கோட்டத்தில் அரிப்பு கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் முக்கரிப்புத்துறை கிராமத்தில் அமைந்துள்ள 0.4465 ஹெக்டேயர் நிலப் பிரதேசமொன்று பூராகவும் வியாபித்து காணப்படுகின்ற அரிப்பு அதிகாரத்துக்குட்பட்ட 2013 ஆகஸ்ட் 16ஆம் திகதிய 1823/73 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பழைய/பாதுகாப்பு நினைவு சின்னமொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் கணக்காய்வு திகதி வரைக்கும் எவ்வித தொல்பொருளியல் பணிகளும் இடம் பெற்றிருக்கவில்லை. | ஒப்புக்கொள்கிறேன். | சட்டம், வர்த்தமானி அறிவிப்புகள், உள்ளக நடைமுறைகள் மற்றும் உள்ளக சுற்றறிக்கைகளின் பிரகாரம் தொல்பொருள் இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |
| (உ) | மன்னார் மாவட்டத்தின் நாணாட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் முருங்கன் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள முருன்கன் வைத்தியசாலை காணியில் அமைந்துள்ள நீளத்தில் 160 செ.மீ. மற்றும் அகலத்தில் 61 செ.மீ. உடைய கல்வெட்டு | தற்போது, கல்வெட்டு மற்றும் நாணயவியல் துறை மூலம், கல்வெட்டை பாதுகாக்க, 2024 ஆம் வருடத்தில், பாதுகாப்பு வேலி மற்றும் | சட்டத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தொல்லியல் நினைவுச் |

| | | | |
|---|---|---|---|
| | கடிதம் கிறி. வ. 2 - 3 நூற்றாண்டுகளுக்கு உரியதாக கூறப்படுகின்றதுடன் அது தேய்மானத்திற்குற்பட்டுள்ள மேற்கு பிராமிய எழுத்துக்கள் காணப்பட்ட கல்வெட்டு கடிதம் 2014 ஜுன் 20 ஆம் திகதிய 1868 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பழைய/பாதுகாப்பு நினைவு சின்னமொன்றாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் வைத்தியசாலை ஊழியர்களினால் அது அமர்ந்திருப்பதற்கு பாவனைக்குட்படுத்தப்பட்டதன் காரணமாக பாதுகாப்பற்ற நிலையில் எழுத்துக்கள் அழியப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. | பெயர் பலகையொன்றை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என, தெரிவிக்கப்பட்டது. | சின்னங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | கந்தரோடை (கந்துருகொட) தொல்பொருளியல் இடங்களில் சிறிய தூபம் காணப்படுகின்ற பகுதியில் மழை நீர் நிரம்பி காணப்படுவதன் காரணமாக அழிவுக்கு உட்படுகின்ற தொல்பொருளியல் தூபம் பகுதிகள் உடைய வளாகத்தில் மழை நீர் வடிந்து ஓடுவதற்காக குழாய் நீர் கட்டமைப்பொன்றை பொருத்துவதற்காக 2016 ஆம் வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 534,150 ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 67,000 தொகை யொன்று செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த குழாய்கள் விளைவற்று வளாகத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. | பிரதேச செயலாளரின் அனுமதியுடன் 08 பனைமரங்கள் வெட்டி அகற்றப்பட்டதுடன், நீர் வடிந்தோடுவதற்கு குழாய்களை பொருத்துவதற்கான ஏற்பாட்டின் போது விவசாயிகளால் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதால் அந்த பணிகளை மேற்கொள்ள முடியாது என தெரிவிக்கப்பட்டது. | சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட விதிகளின்படி, தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருள் இடங்களைப் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் இடையூறு விளைவிக்கும் நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். |
| (எ) | வெளிதரப்பினர்களுக்கு அகழ்வு அனுமதி பத்திரங்களை வழங்குதலின் கீழ் 2023 ஜுன் 30 ஆம் திகதியில் கிடைக்கப்பெற வேண்டிய இறுதி கல்வியியல் அறிக்கைகள் 53 ஆக காணப்படுவதுடன் அதில் 10 வருடங்களை விஞ்சிய 07 அகழ்வு அனுமதி பத்திரங்கள் மற்றும் 05 வருடங்களை விஞ்சிய 15 அகழ்வு அனுமதி பத்திரங்களும் காணப்படுகின்றன. | அறிக்கை வழங்காதவர்களுக்கு அறிக்கை வழங்குமாறு நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளதுடன், நினைவூட்டல் அனுப்பப்பட்டு இதுவரை அறிக்கை வழங்காதவர்களுக்கு உரிமம் வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அகழ்வு அறிக்கைகளை பெற்றுக்கொள்ளுதல் துரிதமாக இடம்பெற வேண்டும். |
| (ஏ) | அகழ்வு பணிகள் நடைமுறையில் 6.1.3 பிரிவின் பிரகாரம் 2022ஆம் வருடத்திற்கான திணைக்களத்தின் கீழ் இடம்பெறுகின்ற 13 தொல்பொருட்கள் அருங்காட்சியகங்களுக்கு, அருங்காட்சிப் பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும், அகழ்வு | 2022ஆம் ஆண்டு அறிக்கைகள் வழங்காத அருங்காட்சியகங்களுக்கு அருங்காட்சியக மெய்மையாய்வு அறிக்கைகளை | திணைக்களத்தினுள் உள்ள போதிய அறிவுள்ள அதிகாரிகளின் பங்களிப்புடன் வருடாந்த |

| | | | |
|---|---|---|---|
| | பணிகள் நடைமுறையில் 7.1 பிரிவின் பிரகாரம் 2022ஆம் வருடத்திற்கான வருடாந்த கட்டுப்பாட்டு அறிக்கையை தயாரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வழங்குமாறு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டு 2022ஆம் வருடத்திற்கான மெய்மையாய்வு அறிக்கைகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், 2022ஆம் வருடத்திற்கான கட்டுப்பாட்டு அறிக்கைகளில் தகவல்களை வழங்க நேரடியாக தலையிட வேண்டியவர் போதிய அறிவுள்ள அகழ்வாராய்ச்சி பணிப்பாளரொருவர் அல்லது உதவி பணிப்பாளரொருவர் ஆக காணப்படவேண்டிய போதிலும், அந்த பதவிகள் வெற்றிடமாக இருப்பதால் அந்த அறிக்கைகளை முறையாக வழங்குவது கடினமாக காணப்படுகிறது. இருப்பினும், 2022ஆம் ஆண்டுக்குரிய பிரதேச அளவில் பெற்றுக்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. | கட்டுப்பாட்டு அறிக்கையானது தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஐ) | நிலையான கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள அகழ்வு வழிகாட்டல்கள் 03 இல் 16 வது பிரிவில் மற்றும் அகழ்வு பணி நடைமுறையில் 2.1.2.2 பிரிவின் பிரகாரம் கடந்த அகழ்வு அறிக்கை முழுமைப் படுத்தப்படாதிருந்ததுடன் தனிப்பட்டவர்களுக்கு அகழ்வு நடவடிக்கைகளுக்காக மீண்டும் புதிய அனுமதி பத்திரங்களை வழங்கப்படக் கூடாது என்று இருந்த போதிலும் கடந்த அகழ்வு அறிக்கை பெற்றுக் கொடுக்காத தொல்பொருள் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் இரண்டு பேராசிரியர்களுக்கு மீண்டும் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான 08 அகழ்வு அனுமதிப்பத்திரம் இறுதி கல்வியியல் அறிக்கை சமர்ப்பிக்க | அறிக்கைகள் வழங்கப்படாத பேராசிரியர்களுக்கு நினைவூட்டல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கபடுதல் மற்றும் அறிக்கை பெற்றுக்கொள்ளுதல் முறைப்படுத்த தொல்லியல் ஆலோசனைக் குழுவின் ஆலோசனையின் பேரில் நிபுணர் குழுவின் பரிந்துரைகளின் பேரில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. | துபாராம சிலை, விஜயராம சிலை மற்றும் கிரிபத்வெஹர அகழ்வாராய்ச்சிக்கான அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் உரிமைகள் மற்றும் அவதானிப்புகளின் பதிவுகளை திணைக்களம் பெற்று எதிர்கால தொல்லியல் பணிகளை செயல்படுத்துவதற்கு உறுதுணையாக |

| | | | |
|---|---|---|---|
| | படாதிருந்த போதிலும் 2022ஆம் ஆண்டு வரை புதிய அகழ்வு அனுமதி பத்திரங்கள் 14உம் வழங்கப்பட்டிருந்தது. அத்தோடு, தூபாராம சிலை, விஜயராம சிலை, மற்றும் கிரிபத்வெஹெர ஆகிய இடங்களில் அகழ்வுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட அனுமதி பத்திரத்தின் கீழ் அறிக்கை கையளிக்கும் காலமும் கடந்திருந்தது. | | இருக்க வேண்டும். |
| **(ஒ)** | அகழ்வுப் பணிகள் நடைமுறையின் 02 ஆவது பிரிவின் பிரகாரம் அசையும் தொல்பொருள்களை ஆவணப்படுத்தலுக்காக முறையான மதிப்பீடொண்டு மேற்கொள்ளப்பட்டு தொல்பொருள்கள் அடையாளம் காணுதல், பொதுமக்கள் காட்சிப்படுத்தலுக்காக ஈடுபடுத்தல் அல்லது வேறு மாற்று நடவடிக்கைகள் அவதானம் செலுத்தாததன் அடிப்படையில், பெரும்பாலான தொல்பொருள்கள் காலந்தோரும் அழிவடையும் நிலையில் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் திணைக்களத்தின் அகழ்வுகள், முறையற்ற அகழ்வுகள் மற்றும் பொதுமக்கள் நன்கொடையின் கீழ் அடையாளம் காணப்பட்ட தொல்பொருள்கள் பெரும்பான்மையானவை ஹம்பன் தொட்ட மற்றும் கேகாலை தொல்பொருள்கள் அலுவலக வளாகத்தினுள் குவிக்கப்பட்டிருந்தது. | அசையும் தொல்பொருட்களை அடையாளம் காணுதல் மற்றும் ஆவணப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | அசையும் தொல்பொருட்களை அடையாளம் கண்டு ஆவணப்படுத்துதல் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| **(ஓ)** | பணிகள் நடைமுறை கோவையின் பிரிவு இலக்கம் 1.2.22 இன் பிரகாரம் 2020 ஆம் வருடத்தின் பின்னர் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 18 ஆராய்ச்சி செயற் திட்டங்களுக்காக ஆராய்ச்சி அறிக்கை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் பூகோளவியல் தரவுகள் சேகரிக்கும் (GIS) அலகுக்கு சேகரிக்கப்பட்ட தரவுகளை பெற்று கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பூகோளவியல் தளங்களை நிர்ணயிக்கும் (GPS) கருவிகள் தட்டுப்பாட்டின் அடிப்படையில் இந்த குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும், 2024ம் ஆண்டு GPS கருவிகள் கொள்வணவு செய்யப்பட்டு துரிதமாக பணிகளை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | பூகோளவியல் தரவுகள் சேகரிக்கும் (GIS) அலகுக்கு ஆராய்ச்சி அறிக்கைகளை பெற்றுக்கொடுத்து நடவடிக்கைகள் துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டும். |
| **(ஔ)** | திணைக்களத்தினால் 2023 ஆம் வருடம் வரையும் அடையாளங்காணப்பட்ட தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை 5,664 ஆகும். அதற்கிடையில், 2023 டிசம்பர் 31 திகதியில் தேசிய தொல்பொருளியல் தளங்களின் பெயர் பட்டியலினுள் வர்த்தமானியின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த தொல்பொருளியல் தளங்களின் | இப்பணிகளை விரைவாக மேற்கொள்ள தொல்லியல் திணைக்களத்திடம் தேவையான உபகரணங்கள் இல்லை என்பது பிரதானமாக தாக்கம் | புவிசார் அளவுத்திருத்தத் தரவைப் பெறுவதற்கும், அவற்றை புவிசார் தரவுக் கோவையில் சேர்ப்பதற்கும், அத்தியாவசியமான |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 2,958 ஆக காணப்படுவதுடன் திணைக்களத்தின் இணையதளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள புவிசார் தரவு கோவையிள் உள்ளடக்கப்பட்டுள்ள தொல்பொருளியல் தளங்களின் எண்ணிக்கை 1,758 ஆகும். அதன் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் அடையாளம் காணப்பட்ட ஒட்டுமொத்த தொல்பொருளியல் தளங்களின் நூற்றுக்கு 48 வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படாதிருந்ததுடன் நூற்றுக்கு 69 பூகோளவியல் தளங்களின் முறையான தரவு பெறப்பட்டு அவை புவிசார் தரவு கோவைக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தியிருந்ததுடன், அவற்றை விரைவாக பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்காக பிரதேச மட்டத்திலான அதிகாரிகளுக்கான பயிற்சியும் நிறைவுசெய்யப்பட்டு உள்ளதாக கூறப்பட்டுள்ளது. | மூலதன உபகரணங்களை பெறுகைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதிகாரிகளு பயிற்சி அளிக்கப்பட தேவையான செயல்திறன் குறிகாட்டிகளை அண்மிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (க்) | யான் ஓயா நீர் பாசன நீர்த்தேக்க செயற் திட்டத்தின் தொல்பொருள் சேதங்களை மதிப்பிடும் கணக்கீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்காக 2017 பிப்ரவரி 14ஆம் திகதி பொது வைப்புக்கள் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ள தொகையில் ரூபா 2,105,152 வை தொடர்ந்தும் பொது வைப்பு கணக்கினுள் தடுத்து வைத்திருப்பது அவதானிக்கப்பட்டது. | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | தொல்லியல் சேத மதிப்பீட்டு கணக்கெடுப்பு அறிக்கைகளைப் பெறுவதற்காக செயற்திட்ட முன்மொழியாளர்களினால் திணைக்களத்திற்கு வைப்பிலிடப்பட்டுள்ள பணம் தொடர்பில் சட்டத்தின் பிரிவுகளின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (க) | தீகவாபி தாகபயின் புனரமைப்பு பணிக்காக Rotatable arched template ஒன்று ரூபா 4,147,400க்கு உற்பத்தி செய்து கொள்வதற்காக அரச தொழிற்சாலைகள் திணைக்களத்திற்கு ரூபா 2,239,596 ஆன முற்பணத் தொகையொன்று 2020 ஆகஸ்ட் 25ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டு பின்னர் அந்த பணிகள் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக அது அளவை உபகரணத்தின் மூலம் அளவை பெற்றுக் கொள்ளும் முறைமையின் பிரகாரம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. செலுத்தப்பட்ட முற்பணத்திலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள இரும்புப் பகுதிகள் சைத்தியை நிர்மாணித்ததன் பின்னர் தேவையான பராமரிப்பு பணிகளுக்காக பயன்படுத்தக்கூடிய வகையில் கழற்றி நீக்கக்கூடிய வகையில் கழற்றி நீக்கக்கூடிய படிகளை முடிவுறுத்துவதற்காக பாவனைக்குட்படுத்துவதற்கு | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | ரூபா 2,239,596 முற்பணமாக அரச தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டு ஏறக்குறைய 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும், முற்பணத் தொகை தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள எதிர்கால நடவடிக்கைகளுக்கு உயர்மட்ட நிர்வாகமே பொறுப்பேற்று, உடனடியாக முற்பணத்தை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்மொழிக்கப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (கா) | அரசினால் வருடாந்தம் பராமரிப்பு செலவுகளை மேற்கொண்டு A, B, C என தரம் பிரிக்கப்பட்டதன் கீழ் தொல்பொருள்கள் அருங்காட்சியகங்களினால் நாடு பூராகவும் உள்ள 28 அருங் காட்சியகங்களை நடத்திச் சென்ற போதிலும், அதில் திருகோணமலை சமுத்ரா மற்றும் கடற்கரையின் வரலாற்று அருங்காட்சியகத்தின் மூலம் மாத்திரம் கட்டணம் அறவிடப்படுகின்ற முறைமை பின்பற்றப்படுவதுடன் ஏனைய அருங்காட்சியகங்களை காட்சிப்படுத்துவதற்கு கட்டணங்கள் அறவிடப்படாததன் காரணமாக பெற்றுக் கொள்ள முடியுமாகவுள்ள வருமானங்கள் இழக்கப்பட்டிருந்தது. | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | திணைக்களத்தின் கீழ் இயங்கும் A, B, C வகைப்பாட்டின் கீழ் இயங்கும் 28 அருங்காட்சியகங்கள் தொடர்பில் பொதுவான கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டும். |
| (கி) | மினிஸாகே அதீதய ஸொயா, ஹெலஜனயாகே ஆஹார ரடாவ, மானவ வித்யாவ, அப்பேஹெலயோ களின் கல விஸ்கம், பிதுசிதுவம் சங்ரக்ஷனய, சுலு னொவன சுலு கலா ஆகிய 2000 நூல்களின் பிரதிகள் வீதமும், தொல்பொருள் தளங்களின் பெயர் பட்டியல் உடனான இரத்தினபுரி நூலின் 1000 பிரதிகள் மற்றும் Proceeding of the National Archeology Symposium ஆகிய நூலின் 100 பிரதிகள் 2023 டிசம்பர் மாதம் ரூபா 3,732,210 செலுத்தப்பட்டு அச்சிடப்பட்டிருந்ததுடன் ஏற்பாட்டுத் தொகையை விஞ்சி அதற்காக ரூபா 1,632,210 திட்டமிடப்பட்ட 02 செயற்திட்டங்கள் மறைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அச்சிடப்பட்ட புத்தகங்கள் புத்தகங்களை விற்பனை செய்வதற்கு அல்லது பகிர்ந்தளிப்பதற்கு முறையான திட்டத்தின் உடனான வேலை திட்டம் ஒன்று இல்லாததன் காரணமாக 12,380 நூல்கள் அளவில் திணைக்களத்தின் வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள கொள்கலன் இரண்டில் விளைவற்று களஞ்சியம் படுத்தப்பட்டிருப்பதாக 2024 மார்ச் 27ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் புத்தகங்கள் அச்சிடப்படுவது, தொல்லியல் திணைக்களத்தின் புத்தக விற்பனை நிலையம், அமைச்சின் புத்தக விற்பனை நிலையம் மற்றும் சர்வதேச புத்தக கண்காட்சி ஆகியவற்றின் அடிப்படையில் ஆகும். கடந்த ஆண்டு நடைபெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சியில் அரச நிறுவனங்கள் பங்கேற்க முடியாததால், எதிர்பார்த்த மொத்த விற்பனையை அண்மிக்க முடியவில்லை. எதிர் வரும் ஆண்டுகளில் இந்த விடயத்தை கருத்தில்கொண்டு குறைந்தபட்ச இருப்பு இருக்கும் வகையில் அச்சடிக்கும் பணிகள் திட்டமிடப்படும் என தெரிவிக்கப்பட்டது. | 12,380 அச்சிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் முன்னர் அச்சிடப்பட்ட களங்சியத்தினுள காணப்படுகின்ற புத்தகங்கள் பயனர்கள் வாங்குவதற்கான வாய்ப்புகளை வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும். |
| (கீ) | 1998 இன் 24 ஆம் இலக்கமுடைய தொல்பொருள் திருத்த சட்டத்தின் திருத்தப்பட்ட 1940 இன் 09 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளை சட்டத்தின் 46(1) பிரிவின் பிரகாரம் சட்டவிரோதமான முறையில் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்ட தொல்பொருள்களை பாதுகாத்தல் அல்லது | அன்பளிப்பு நிதியின் சதவீத விநியோகம் தொடர்பில் சிக்கல் நிலைகள் ஏற்பட்டுள்ளதோடு, 2024 ஏப்ரல் 05 ஆம் திகதி | தேவையான உதவிகளை செய்து, சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளில் திருத்தம் உடனடியாக முடிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்களை வழங்குபவர்களுக்கு மற்றும் நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரிகளுக்கு, பரிசுகளை வழங்கும் பணிகளுக்காக, தொல்பொருள் பரிசு நிதியமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம், சட்ட விரோத வேலைகளை தடுத்து நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற பங்களிப்புக்காக ஊக்குவிப்புக்காக நிதியிலான பங்களிபொன்றை பெற்றுக் கொடுத்தல் என்ற நோக்கில் இந்த நிதியம் ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும் சட்ட வரைவுகள் ஏற்பாடுகள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தல் என்பன தாமதமானதன் காரணமாக மீளாய் வாண்டிலும் நிதியத்தை நிறுவுதல் மேற்கொள்ளப்படாதிருந்தருடன் மீளாய் வாண்னுள் அறவிடப்பட்டிருந்த ரூபா 130,479,050 ஆன நீதிமன்ற தண்டப்பனத்தில் அரை பங்கை தொல்பொருள் பரிசு நிதியத்துக்கு செலவு வைத்து குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாது போயிருந்தது. | இது தொடர்பாக தயாரிக்கப்பட்ட வரைபை சட்ட வரைவாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தொடர் கண்காணிப்பு மூலம் துரித நடவடிக்கைக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. | வேண்டும். |
| (கு) | கனிமம் மற்றும் பாறை அகழ்விற்காக தொல்பொருள் பரிந்துரைகளை பெற்று கொடுக்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணம் 2019 பிப்ரவரி 25ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் ரூபா 10,000 ஆக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அந்தக் கட்டணம் எதிர்காலத்தில 03 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டியதாக அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் 2019 பிப்ரவரி 28ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவுறுத்தல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆகஸ்ட் 28ஆம் திகதிய அரச நிதி சுற்று நிருப 01/2020 (II) இலக்க பகுதியொன்றின் 05 ஆம் இலக்கத்தின் பிரகாரம் 03 வருடங்களுக்கு ஒரு முறை நூற்றுக்கு 15 உச்சமட்ட அளவில் கட்டணங்கள் திருத்தப்பட வேண்டியிருந்தது. இருந்த போதிலும், தொல்பொருள் திணைக்களத்தினால் அதன் படி கட்டணங்கள் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக அரசுக்கு கிடைக்க வேண்டிய வருமானங்கள் இழக்கப்பட்டு இருந்தது. திணைக்களத்தினால் தற்காலிகமாக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள மாத்திரை மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நூபே பழைய ஒல்லாந்து சந்தையின் கட்டிட தொகுதி கட்டிடத் தொகுதிக்காகவும் சுற்று நிறுப அறிவுரைகளின் பிரகாரம் கட்டணம் | ரூபா 10,000 கட்டணம் முதல் ரூபா 25,000 வரை திருத்தம் செய்ய வரைவு சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | உரிய திருத்தங்களைச் செய்வதற்கு, சமர்ப்பிக்கப்பட்ட வரைவைத் தொடர்ந்து மேற்கொண்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திருத்தப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல் ரூபா 5,000 அளவிலான குறைவான கட்டணத்துக்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தது. | | |
| (கூ) | 2009, 2010 மற்றும் 2012 ஆகிய வருடங்களிலே புலத்சிங்கள பாஹியாங்கல ∴ப்ராக் வரலாற்று ரீதியான அகழ்வு செயற்திட்டங்கள் மற்றும் 2013ஆம் வருடத்தில் கித்துகள பெலிலென அகழ்வு செயற்திட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தொல்பொருளியல் தகவல்கள் மற்றும் தடயங்கள் என்பவற்றை விஞ்ஞானபூர்வமான பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு எடுத்துச் செல்வதற்கு 2017 மே 08 ஆம் திகதி விரிவுரையாளர் ஒருவரினால் பொறுப்பெடுக்கப்பட்டதாக சான்றுகள் காணப்படுவதுடன் அந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் அந்த தொல்பொருளியல்களை மீண்டும் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு பொறுப்பு அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பாஹியங்கல ∴ப்ராக் வரலாற்று ரீதியான அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் ஆய்வுகூட வசதிகளின் கீழ் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். அதற்கான போதிய வசதிகள் தொல்பொருள் திணைக்களத்திடம் இல்லாததால், எச்சங்களை முறையான சூழலில் பாதுகாப்பாக வைப்பதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் மூலம், சாமானியர்களுக்குக் காட்சிப்படுத்துவதை விட, ஆராய்ச்சி செய்து வரும் விஞ்ஞானிகளை கல்விப் படிப்புக்கு மற்றும் ஆராய்ச்சிக்கும் பயன்படுத்துவதே முதன்மை நோக்கமாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. | தொல் பொருட்களை பாதுகாக்க போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கெ) | 2023 ஆம் ஆண்டின் பாதீடு மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்தின் ஊடாக நிலத்தின் அடிதளத்தில் நீர் கசிவுக்கு தீர்வு காணும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 15,000,000 ஏற்பாட்டில் இருந்து ஆரம்ப அறிக்கை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக மாத்திரம் ரூபா 2,146,736 செலவிடப்பட்டதால் மொத்த ஏற்பாட்டில் நூற்றுக்கு 77 பயன்பாடு அல்லாத அதற்கு பதிலாக செயலிழந்துள்ள உள்ளக தொலைபேசி கட்டமைப்பை மீண்டும் தயாரிப்பதற்காக ரூபா 3,000,000ஆன புதிய செயற்திட்டமொன்று பதிலீடு செய்யப்பட்டுள்ளதுடன் திருத்தப்பட்ட திட்டம் அமைச்சின் செயலாளரினால் அனுமதி வழங்கப்படாததன் அடிப்படையில் அந்த பணிகளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2023 ஒதுக்கீடு மற்றும் செயல் திட்டத்தின் படி, நிலத்தடியில் நீர் கசிவைத் தடுக்க பணம் ஒதுக்கப்பட்ட போதிலும், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) இது தொடர்பான அறிக்கையை 2023 நவம்பர் 15, அன்று வழங்கியது. அந்த அறிக்கையில் உள்ள சிக்கலான பொறியியல் பணிகளை நவம்பர் மாத இறுதிக்குள் செயல்படுத்த முடியாததால், உள்ளக தொலைபேசி கட்டமைப்பை மீண்டும் நிறுவுவதற்கான புதிய | பொதுப் பணத்தைச் செலவழிப்பதில் கவனமாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திட்டமாக உரிய தொகை முன்வைக்கப்பட்ட போதிலும், வேலையை முடிக்க போதுமான நேரம் இல்லையென்பதால் அதனை அமைச்சினால் அங்கீகரிப்பதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. | |

4. **மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் தொல்பொருள் திணைக்களத்தின் 4,317 ஆன அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த பதவி அணியினரில் 1,660 அவ்வாறனில் நூற்றுக்கு 38 ஆன வெற்றிடங்கள் காணப்படுவதுடன், அதனினுள் 15 வருடங்களை விட அதிக காலமாக வெற்றிடமாக காணப்படுகின்ற திணைக்களத்துக்கு மாத்திரம் உரித்தாகக்கூடிய கல்வியியல் நடவடிக்கைகளுக்காக நிறைவேற்றுத் தரத்தில் உள்ள 07 பணிப்பாளர் பதவிகளும் திணைக்களத்தின் சட்ட அதிகாரி பதவியும் உள்ளடங்கியுள்ளது. | 2024 மார்ச் 31 ஆம் திகதியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 1,576 ஆகக் குறைக்க நடவடிக்கை எடுக்க ப்பட்டுள்ளதுடன், இது அனுமதிக்கப்பட்ட அணியினரில் 36.5 சதவீதமாகும். இது தவிர, 25 தொழில்நுட்ப பதவிகள், 14 தொழில்நுட்ப (அலுவலர் பாதுகாப்பு உதவியாளர்) ஆட்சேர்ப்பு செய்வதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அந்த ஆட்சேர்ப்பு தொடர்பான நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 07 நிறைவேற்று நிலை பணிப்பாளர் பதவிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்த போதிலும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெறாத காரணத்தினால் ஆட்சேர்ப்பு செய்ய முடியவில்லை என தெரிவிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 250 ஆக காணப்பட்ட போதிலும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் சேவையில் உள்ள உள்ளவரான | 2024 மார்ச் 31 திகதியில், அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவிகளின் எண்ணிக்கை 29 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த மேலதிக அபிவிருத்தி | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை திருத்துவதற்கு அல்லது மேலதிகமாக உள்ள அபிவிருத்தி |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 285 ஆக காணப்பட்டதனால் 35 மேலதிகமொன்றாக காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை திருத்தங்களை மேற்கொள்ளப்படுவதற்கு அல்லது அவர்களை ஒன்றிணைந்த சேவைக்காக விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அங்கீகரிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட 44 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வெற்றிடமாக காணப்படுகின்றதுடன், அந்த பதவிகளுக்கான கடமைகளை மேல் குறித்த உத்தியோகத்தர்களே நிறைவேற்ற வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களை ஒன்றிணைந்த சேவைக்கு விடுவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (இ) | தொல்பொருள் உதவியாளர் பதவிக்காக 688 நபர்களும், காவலாளி பதவிக்காக 201 நபர்களும் மற்றும் சாரதி பதவிக்காக இருவரும் ஆக திணைக்களத்தின் ஆரம்ப மட்டத்திலான பதவிகளுக்காண காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2023 ஆம் வருடத்தில் ஆட்சேர்க்கப்பட்ட பல்பணி அபிவிருத்தி பணி உதவி பயிற்சியாளர்கள் பிரதேச அலுவலகங்களுக்காக முன்மொழியப்பட்டு திட்டமிடப்பட்ட எண்ணிக்கையை விட கூடுதலாக சேவை தேவைபாட்டை கருத்திற் கொள்ளாமல் உள்வாங்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தில் காணப்பட்ட தொல்லியல் உதவியாளர் மற்றும் காவலாளி பதவிக்காக மொத்த வெற்றிடங்களை எண்ணிக்கையை கருத்தில்கொண்டு அனைத்து பிரதேச அலுவலகங்களுக்கும் பிரிக்கப்படும் வகையில் நியமனங்கள் செய்யப்பட்டன. ஆனால் பல்பணி உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் இணக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில், அவர்கள் வசிக்கும் மாவட்டத்திற்கோ அல்லது அவர்கள் எளிதில் சென்றடையக்கூடிய மாவட்டத்திற்கோ அவர்களை நியமிக்குமாறு அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் அடிப்படையில் வெற்றிடங்களை எண்ணிக்கையை விஞ்சிடாமல் உரிய நியமணங்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | பதவி அணியினர்களை நியமிக்கும் போது திட்டமிட்டபடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |